அளவில்லா அருளாளன், இணையில்லா அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்...

திருச்சி-620 008.

நாள் 10.12.2009

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுக்கு அந்நஜாத் மாத இதழ் ஆசிரியர் அபூ அப்திில்லாஹ் எழுதியது,

உலகமெங்கும் சாந்தி நிலவ இணை, துணை இல்லாத தன்னந்தனியனான ஏகன் ஓரிறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

கலைஞர் ஐயா அவர்களே! கடந்த 09.09.2009 அன்று நான் தங்களுக்கு எட்டுப் பக்கங்கள் கொண்ட ஒரு விரிவான மடல் தீட்டினேன். அதற்குத் தங்களிடமிருந்து பதில் வரும், வரும் என எண்ணி எண்ணி ஏமாந்து வருகிறேன். நான் தங்களைப் பற்றி அறிந்த விபரம், தங்களுக்கு வரும் எந்தக் கடிதமாக இருந்தாலும் தங்களின் அரசியல், இலக்கியப்பணிச் சுமைகளுக்கிடையிலும் தவறாது பார்வையிட்டு அதற்கு உரிய பதில் எழுதுவது தங்களின் மிக உயர்ந்த பண்பாடு என்பதாகும்.

இந்த எண்ணமே கடந்த மூன்று மாதங்களாக உங்களின் மேலான பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கச் செய்தது. ஒருக்கால் எனது 09.09.2009-ய கடிதம் தங்களின் மேலான பார்வைக்கு வர வில்லையோ என்ற ஐயத்தின் காரணமாகவே மீண்டும் இந்த நினைவூட்டல் கடிதத்துடன் அக்கடித நகலையும் அனுப்பியுள்ளேன். இத்துடன் “அறிஞர் அண்ணா கண்ட இஸ்லாம்”, ”என் பார்வையில் குர்ஆன் ஒரு புதையல்” ஆகிய சமரசத்தில் வெறியான இரு ஆக்கங்களையும், “கீழ் உள்ளவர்களும் உபதேசிக்கலாம்” என்ற பேரறிஞர் அண்ணாவின் அறிவுரை வெளியான முஸ்லிம் முரசு மாத இதழின் ஒரு பக்கத்தையும், “சிந்திக்க சில நொடிகள் ...” என் சிற்றிதழையும் அனுப்பியுள்ளேன். தயை கூர்ந்து தங்களின் விலைமதிக்க முடியாத பொன்னான நேரத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி இவற்றை ஆய்வு செய்வீர்களானால் தமிழகத்திற்கு மட்டுமல்ல, அகில உலக மக்களுக்கும் வளமான, சுபிட்சமான வாழ்வு கிடைப்பதுடன் ஒரு தாய் மக்களாக சமத்துவமாக வாழ வழி பிறக்கும் என பெரிதும் நம்பிக்கை வைக்கிறேன்.

கலைஞர் ஐயா அவர்களே, டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார் போன்ற மேதைகளுக்கு இஸ்லாத்தைத் தழுவும் எண்ணம் இருந்தும் அது கைகூடாமல் போனதற்கு இரண்டு மிக முக்கிய காரணங்கள் உண்டு. ஒன்று அவர்கள் ஆட்சி அதிகாரத்தில் இருக்கவில்லை. இரண்டாவது முஸ்லிம் மதகுருமார்களான புரோகிதர்களுக்குத் தூய இஸ்லாமிய மார்க்கத்தில் அணுவளவும் அனுமதியோ, அதிகாரமோ இல்லை; சட்ட விரோதமாக, திருட்டுத்தனமாக அவர்கள் இஸ்லாமிய மார்க்கத்தில் நுழைந்து மக்களிடையே ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள் என்ற பேருண்மையை அவர்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

ஒரே இறைவனின் இறுதித் தூதரால் போதிக்கப்பட்ட தூய இஸ்லாமிய மார்க்கம் மிகக் குறுகிய காலமே அதன் தூய்மை கெடாமல் பரிசுத்தமாக இருந்தது. தூய வாழ்க்கை நெறி மதம் பிடித்த மதமாக இப்புரோகிதர்களால் மாற்றப்பட்டே கடந்த ஆயிரம்(1000) வருடங்களாக முஸ்லிம்களால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. புரோகிதர்களான முஸ்லிம் மத குருமார்களால் போதிக்கப்பட்டு முஸ்லிம்களால் கடைபிடிக்கப்பட்டு வரும் மூடக் கொள்கைகள், மூட நம்பிக்கைகள், அநாச்சாரங்கள், அறிவுக்கே பொருந்தாத செயல்கள் இவற்றை ஆராய்ந்த பெரும் பெரும் மேதைகள் இதர மதங்களைப் போல், இஸ்லாமும் ஒரு மதமே. மக்களுக்கு வெறியூட்டும் அபின் போன்றதே என்ற முடிவுக்கு வந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

அதனால் அந்த மேதைகள் பல கடவுள் கொள்கையை மறுத்ததுபோல், ஓரிறையையும் மறுக்கும்

கட்டாயத்திற்கு ஆளானார்கள். நாத்திகத்தை மக்களுக்குப் போதிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அவர்களைக் குறை காண முடியாது.

அவர்களைத் தவறான வழிக்கு இட்டுச் சென்றதே தூய வாழ்க்கை நெறியை-மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்ட மதப்புரோகிதர்களான முஸ்லிம் மத குருமார்களே. கடந்த ஆயிரம்(1000) வருடங்களான முஸ்லிம் உலகம் இந்த முஸ்லிம் மத குருமார்களின்-புரோகிதர்களின் முழுக் கட்டுப் பாட்டில் இருந்து வந்ததால் இந்த துர்பாக்கிய நிலை நீடித்து வந்தது.

இதுவரை மூல அரபி மொழியில் இருந்து வந்த இறுதி வழிகாட்டல் நெறிநூல் அல்குர்ஆன் பிற மொழிகளில் கிடைக்காத காரணத்தால் முஸ்லிம் மத குருமார்களான புரோகிதர்களால் மக்களை எளிதாக ஏமாற்றி வயிறு வளர்க்க முடிந்தது. ஆனால் இன்றோ அல்குர்ஆன் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுவிட்டது. தமிழிலும் கிடைக்கிறது. எனவே அல்குர்ஆன் கூறும் உண்மைக் கருத்துக்களை நேரடியாகப் பார்த்தால் இன்றைய முஸ்லிம் சமுதாயம் நெறிநூல் அல்குர்ஆனின் அசலான போதனைகளை கைகழுவிவிட்டு, இந்த மத குருமார்களின் துர்போதனைகளையே நேர்வழியாக நம்பிச் செயல்படுவதை அறிய முடியும்.

“மேலே இருப்பவர்கள் கீழே இருப்பவர்களுக்கு உபதேசிப்பதாக மார்க்கம் இருந்து வருகிறது. கீழே உள்ளவர்களால் மேலே உள்ளவர்களுக்கும் உபதேசிப்பதாக மார்க்கம் இருக்க வேண்டும்” என்று அறிஞர் அண்ணா கூறியுள்ளார். இதுதான் உண்மை என்பதை அதாவது ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடு இல்லாமல் உபதேசிக்க வேண்டும் என்பதை வாழ்க்கை நெறிநூல் அல்குர்ஆன் 9:71, 103:1, 2,3 இறைவாக்குகள் உறுதிப்படுத்துகின்றன. இயற்கை மார்க்கமான - சாந்தி மார்க்கமான இஸ்லாத்தில் மதகுருமார்கள் என ஆணவம் பேசிக்கொண்டு பிழைப்பு நடத்தும் புரோகிதர்களுக்கு அணுவளவும் அனுமதி இல்லை என்பதை இறை நெறிநூல் அல்குர்ஆன் 7:3, 33:36, 66,67,68 இன்னும் இவைபோல் பல இறைவாக்குகள் உறுதிப்படுத்துவதை அறியலாம்.

ஆம்! கலைஞர் ஐயா அவர்களே! டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார் போன்ற சுய சிந்தனையாளர்களுக்குக் கிடைக்காத பெரும் பாக்கியம் பிறவிச் சிந்தனையாளரான உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. மேலும் ஆட்சி அதிகாரமும் உங்கள் கையில் இருக்கிறது. எனவே சத்தியத்தை-நேர்வழியை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வாய்ப்பு உங்களுக்குப் பிரகாசமாக இருக்கிறது. உங்கள் அறிவிப்பை ஏற்றுச் செயல்படும் கணிசமான மக்களும் இருக்கிறார்கள். இந்த நல்ல வாய்ப்பைத் தவற விடாதீர்கள் என மெத்தப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

உண்மையை உரக்கச் சொல்லும்போது கடும் எதிர்ப்பு ஏற்படத்தான் செய்யும். முஸ்லிம் மதகுருமார்கள் உட்பட அனைத்து மத வெறியர்களும் பெருங்கலகத்தை ஏற்படுத்த முற்படுவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆயினும் பெருத்த கலவரங்கள், புரட்சிக்குப் பின்னால் தான் உண்மைகள்-நியாயங்கள் நிலைநாட்டப்பட்டுள்ளன என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். சிலைவழிபாடு என்ற வழிகேட்டை எதிர்த்து தந்தை பெரியார் குரல் எழுப்பியபோது தமிழகத்தில் ஏற்பட்டக் கொந்தளிப்பு நீங்கள் அறியாததல்ல.

இப்படிப்பட்டக் கொந்தளிப்புக்கு அஞ்சினால் உள்ளம் ஒப்புக் கொள்ளும் உண்மைகளை-நியாயங்களை உரத்துச் சொல்லத் தயங்கும் ஊமையர்களாக நேரிடும் என்பது நீங்கள் அறியாததல்ல. உலகில் இதுவரை ஏற்பட்டுள்ள சீர்திருத்தங்கள் அனைத்தும் பெரும் கலவரங்கள், குழப்பங்கள், புரட்சிகளுக்குப் பின்னரே ஏற்பட்டன என்பதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். சுமார் 1450 வருடங்களுக்கு முன்னர் ஒரே இறைவனின் இறுதித் தூதர், 365 சிலைகளை வைத்து வழிபாடுகள் செய்து கொண்டும், குடி, விபச்சாரம், கொலை, கொள்ளை, களவு என அனைத்து வகை அநியாயங்கள்,

அட்டூழியங்களில் மூழ்கி இருந்த அந்த அரபு மக்களிடையே சத்தியத்தை, நேர்வழியை எடுத்துப் போதிக்கும்போது ஏற்பட்ட குழப்பங்கள், கலவரங்கள், உயிர்ப்பலிகள் இவை அனைத்தும் வரலாற்று ஏடுகளில் நிறைந்து காணப்படுகின்றன. இறைவனின் இறுதித் தூதரைக் கொல்லவும் கொடியவர்களான மதவெறியர்கள் துணிந்தார்கள். அதனால் இறைவனின் இறுதித் தூதர் மக்காவிலிருந்து மதீனாவுக்கு புலம் பெயரவும் நேரிட்டது என்பதையும் வரலாறு கூறுகிறது.

தெலுங்கானா மாநிலம் அமைய ஏற்பட்ட கலவரங்கள், வன்முறைச் செயல்கள், உயிர்ப்பலிகள், தீக்குளித்தல்கள், தியாகங்கள் இவை அனைத்தும் இப்போது நாம் பெற்ற அனுபவங்கள்.

ஆம்! சமுதாய மறுமலர்ச்சி என்பது இப்படிப்பட்ட நிலைகளைக் கடந்தே ஏற்படும் என்பதே உண்மையாகும். அன்று இறைவனின் இறுதித்தூதரிடம் ஆட்சி அதிகாரம் இருக்கவில்லை. மிகப் பெரும் தியாகங்களுக்குப் பின்னரே ஆட்சி அதிகாரம் கிடைத்தது.

கலைஞர் ஐயா அவர்களே, இன்றோ தமிழகத்தின் ஆட்சி அதிகாரம் உங்கள் கைகளிலேயே இருக்கிறது. நீங்கள் சத்தியத்தை உணர்ந்து அதை நிலைநாட்ட முன்வந்தால் அன்றைய நிலையைவிட இன்று அது உங்களுக்கு எளிதாக அமையும் என்றே நம்புகிறேன்.

ஆதி மொழியும் நமது தாய் மொழியுமான தமிழுக்காகவே உங்கள் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துள்ளீர்கள். பெரும் போராட்டத்திற்குப் பின்னர் தமிழுக்கு செம்மொழி மதிப்பைப் பெற்றுத் தந்துள்ளீர்கள். அதற்காகவே கோவையில் வரும் ஆண்டில் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நடத்த இருக்கிறீர்கள். அம்மாநாடு முழு வெற்றிபெற தமிழ் மக்கள் அனைவரும் பாடுபடக் கடமைப்பட்டி ருக்கிறோம். அந்த மகத்தான பெரும் பணியில் தங்கள் பொன்னான நேரத்தை முழுமையாக அர்ப்பணித்து வருகிறீர்கள்.

அம்மாட்டு இலச்சினையில் தாங்கள் குறிப்பிட்டிருக்கும் “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற இலட்சியம் அவசியம் நிறைவேற வேண்டும். அகிலங்கள் அனைத்தையும் படைத்து நிர்வகித்து வரும் இணை துணை இல்லாத தன்னந்தனியனான ஏக இறைவன் மனித இனத்திற்கென்று கொடுத்துள்ள தூய வாழ்க்கை நெறி நிலைநாட்டப்பட்டால் மட்டுமே அந்த இலட்சியம் நிறைவேற வழி பிறக்கும்-நீங்கள் பெரிதும் விரும்பும் சமத்துவம் பிறக்கும் என்பதைத் தங்களின் மேலான சிந்தனைக்குக் கொண்டு வருகிறேன்.

சுமார் பத்து(10) கோடி தமிழர்களின் தாய்மொழியான தமிழுக்கு தமிழின் நிலைப்பாட்டிற்குப் பாடுபடுவது போல், சுமார் ஆறு நூறு (600) கோடி மக்களின் சமத்துவ நிலைக்கு-ஒரு தாய் மக்கள் என்ற உன்னத நிலையை நிலைநாட்ட நாம் எந்த அளவு உழைக்க வேண்டும், தியாகங்கள் செய்ய வேண்டும் என்பதை பிறவிச் சிந்தனையாளரான உங்களால் உணர முடியும் என பெரிதும் நம்புகிறேன்.

தங்களின் மேலான பெறுமதி நிறைந்த பதிலுக்காகக் காத்திருக்கிறேன். உங்கள் மனம் புண்படும் வார்த்தைகள் இதில் இடம் பெற்று இருந்தால் தயை கூர்ந்து மன்னிக்கும்படி வேண்டி முடிக்கிறேன். அகிலமெங்கும் சாந்தி நிலவட்டுமாக. அதற்காக உழைப்போமாக.

உங்களதும், மக்களதும் நலன் நாடும்

அபூ அப்தில்லாஹ்

அந்நஜாத் மாத இதழ் ஆசிரியர்

9443955333, 9710122152